நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 127/2020
அரசு தரப்புக்காக அ. சா.2 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அம்பிகா | தொழில்/பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 2 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

25th day of June 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.49 )

நான் தற்போது கீழ்அனுவம்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 எனது தங்கை. வழக்கில் இறந்துபோன தவசுந்தரி அ.சா.1–ன் மகள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். தவசுந்தரியின் கணவர். ஆஜர் எதிரிக்கும் தவசுந்தரிக்கும் 2018 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணமான பிறகு தவசுந்தரி எதிரியின் வீட்டில் இருந்தார். தவசுந்தரி என்னிடம் அதிக நகை போட வேண்டும் என்று எதிரி வீட்டில் சொல்கிறார்கள் என்று அடிக்கடி சொல்லுவார். நானும் அ.சா.1–ம் ஒருவரையே திருமணம் செய்து கொண்டோம். தவசுந்தரி என்னிடம் செத்துவிடலாம் போல இருக்கிறது என்று சொன்னார். சாவதற்கு முதல்நாள் தவசுந்தரி எங்களுக்கு போன் செய்தபோது நான் தான் போனை எடுத்தேன். அப்போது தவசுந்தரி நகை வேண்டும் என்று ஆஜர் எதிரி பிரச்சனை செய்வதாக சொல்லி அழுதார். மறுநாள் காலை 08.00 மணியளவில் தவசுந்தரி எங்களுக்கு போன் செய்து உடனே வரும்படி சொன்னார். ஆஜர் எதிரி தன்னிடம் சண்டை போடுவதாகவும் தன்னை வந்து அழைத்து செல்லுமாறும் சொன்னார். மறுநாள் காலை வருவதாக கூறினேன். அன்றைய தினமே 03.00

மணியளவில் எனது கொழுந்தனாரான பாரதிதாசன் போன் செய்து தவசுந்தரி மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து காட்டுமன்னார்கோவில் ஜிஎச் மருத்துவமனைக்கு போகும்போது இரவு 08.00 மணி ஆகிவிட்டது. நாங்கள் பார்த்தபோது தவசுந்தரி மருத்துவமனையில் இறந்து கிடந்தார். யாரும் அங்கு இல்லை. நைட்டி மட்டும் அணிந்திருந்தார். பிறகு எனது தங்கையான அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். சிதம்பரத்தில் சப் கலெக்டர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எதுவும் புகார் கொடுத்தேனா என்றால் நாங்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து தான் புகார் கொடுத்தோம். புகாரை கார்த்தி என்ற வக்கீல் எழுதி கொடுத்தார் என்றும் நானும் கையெழுத்து போட்டேன் என்றும் சொன்னால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருமணம் நடந்து ஒன்றரை வருடங்கள் தவசுந்தரி ஆஜர் எதிரியின் வீட்டில் நன்றாக வாழ்க்கை நடத்தினார் என்று சொன்னால் 5 நாட்கள் எங்கள் வீட்டில் இருப்பார் 10 நாட்கள் அவர்கள் வீட்டில் இருப்பார். ஆஜர் எதிரி தவசுந்தரியுடன் அடிக்கடி சண்டை போட்டு வந்தார் என்பது சம்மந்தமாக காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஷிவானி என்பவர் யார் என்றால் எனது மகள் தவசுந்தரி நாத்தனார். ஷிவானி என்னிடம் போன் செய்தாரா என்றால் இல்லை. 03.06.2020 தேதியில் ஷிவானி என்னிடம் போன் செய்து தவசுந்தரிக்கு வயிற்றுவலி மருத்துவமனைக்கு போகிறோம் என்று சொன்னார்கள் என்றும் நான் அதற்கு மறுநாள் காலையில் வருகிறேன் என்று சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. சப் கலெக்டர் என்னை விசாரிக்கும்போது எதிரி பணம், நகை கேட்கவில்லை என்று தான் சொல்லியுள்ளேனா என்றால் வரதட்சணை கொடுமை என்று தான் சொன்னேன். பாரதிதாசன் எங்களிடம் போன் செய்தபோது தவசுந்தரிக்கு உடல்நிலை சரியில்லை ஆஸ்பித்திரியில் சேர்த்திருக்கிறோம் என்று தான் சொன்னாரா என்றால் ஆமாம். தவசுந்தரி வயிற்றுவலியால் இறந்துவிட்டார் என்றும் நான் சொல்வது போல எதுவும் நடக்கவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. திருமணம் ஆன நாள் முதல் எதிரி தவசுந்தரியுடன் சந்தோஷமாக தான் வாழ்ந்து வந்தார் என்றும் பணம், நகை

வரதட்சணை கேட்டு கொடுமை படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு நடந்து இருந்தால் அப்போதே புகார் கொடுத்திருப்போம் என்று சொன்னால் பெண் வாழ்க்கை என்பதால் புகார் கொடுக்கவில்லை. பாரதிதாசன் 05.00 மணிக்கு போன் செய்திருப்பாரா என்றால் செய்திருப்பார். மருத்துவமனைக்கு சுமார் 09.00 மணிக்கு போய் இருப்போம் என்றால் 08.00 மணிக்கு போய்விட்டோம். அனுவம்பட்டில் இருந்து காட்டுமன்னார்கோவில் மருத்துவமனைக்கு அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் பஸ் இல்லை நாங்கள் ஆட்டோவில் தான் போனோம். தவசுந்தரி வயிற்றுவலி காரணமாக மருத்துவமனைக்கு போகிறேன் என்று தான் சொன்னார் என்றும் எனவே தான் நாங்கள் 05.00 மணிக்கு தகவல் கிடைத்தும் 08.00 மணிக்கு பொறுமையாக மருத்துவமனைக்கு போனோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.08 )

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

Sd/–G.Kulasekaran
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.